DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.14/2024**

**2024-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 28- ம் நாள் வியாழக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 7 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.சரவணன் இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 7 | தொழில் | - | பூசா கடை |
| பெயர் | - | ஜெயன் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | உன்னிகிருஷ்ணன் | சமயம் | - | |
| கிராமம் | - | கக்கன் காலனி | வயது | - | 48/2024 |
| சாதி | - | | | | |

**<u>28.11.2024</u>**

**( எதிரி ஆஜர்)**

**<u>முதல் விசாரணை:</u>**

1.நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து பூசை பொருட்கள் கடை வைத்து நடத்தி வருகிறேன். அ.சா.1 சந்திரா என்பவரை தெரியும். ஆஜர் எதிரியையும் தெரியும். 18-11-2023-ம் தேதி இரவு 09.30 மணியளவில் நான் நடுமலைரோடு செல்லும் வழியில் உள்ள ஒரு கடையில் பொருள் வாங்கிக்கொண்டிருந்தேன். அந்த வழியாக வந்தவர்கள் நடுமலை பாலத்தில் ஒரு ட்ரேக்டர் கவிழ்ந்து விட்டதாக சொன்னார்கள். நான் சம்பவயிடம் சென்று பார்த்தேன். அப்போது வால்பாறை காவல் நிலைய போலீசார் சம்பவயிடத்தில் வரைபடம் வரைந்துகொண்டிருந்தார்கள். வரைபடம் குறித்து போலீசார் எழுதிய தாளில் என்னிடம் போலீசார் கையொப்பம் கேட்டார்கள் நான் சாட்சி கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1-வது சாட்சி கையொப்பம் என்னுடையது. **(பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** என்னோடு இன்னொரு நபர் கையொப்பம் செய்தார். அவரது பெயர் எனக்கு தெரியவில்லை. போலீசார் விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜரிலிருந்து குறுக்கு விசாரணை இல்லை.

**<u>மறு விசாரணை</u>** :

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.